**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 240/2015</u>**
**<u>நாள் 08/06/2026 திங்கட்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஜோதி (PW1) | த/பெயர் – துரைசாமி |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

சாட்சி ஆஜர் அவருடைய முதல் விசாரணையை பொருத்து. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அவர் மூலம் கீழ்க்கண்ட ஆவணங்கள் அவர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டன.

1. (1). 29.01.1954 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா ஆ 1** ஆகவும்,

(2). 01.03.2010 தேதியிட்ட செட்டில் மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா ஆ 2** ஆகவும்,

(3). 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா ஆ 3** ஆகவும்,

(4). 27.08.2015 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா ஆ 4** ஆகவும்,

(5). அஞ்சல் ஒப்புகை அட்டை (2 எண்ணிக்கை) **வா,சா ஆ 5** ஆகவும்,

(6). 31.08.2015 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் **வா,சா ஆ 6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**